SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
December 2023
ISSN: 2456-821X

==================================================================================

# சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

*முனைவர் த. தமிழ்ச்செல்வன்*
*இணைப்பேராசிரியர் (தமிழ்)*
*கல்வியியல்துறை*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
*அண்ணாமலைநகர்*

==================================================================================

*ஆய்வுச்சுருக்கம்*

*பழந்தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் பண்பு தலைச்சிறந்தப் பண்பாக விளங்கியது. ஔவையார் இதைத்தான் 'மருந்தே ஆயினும் விருந்தோடுண்' என்று விருந்தின் மேன்மையை உரக்கச் சொல்லியிருப்பதோடு தமிழர் பண்பாட்டின் உச்சத்தை அறியவும் அவர்களின் விருந்தோம்பல் வாழ்க்கையின் பொதுத்தன்மையை அறிந்துகொள்ளவும் வழிசெய்கிறது என்பதை மையப்பொருளாகக் கொண்டு இவ் ஆய்வுச் சுருக்கம் அமைகின்றது.*

*முன்னுரை*

*சங்ககால மகளிரின் மனையற மாண்புகளில் முதன்மையானதாக விருந்தோம்பல் முன் வைக்கப்பட்டுள்ளது. விருந்தினரை வரவேற்று உணவிடுதலே இல்லறத்தான் கடமை என்று தெளிவுறுத்துகின்றார். நீதி மற்றும் காப்பியம் புகழ்ந்துரைக்கும் உணவிட்டு உயிர் ஓம்பும் பழக்கத்தின் மூலஊற்றாக அகத்திணையிலக்கியம் விளங்கினமை தெள்ளிதின் புலனாகும். அகத்திணையிலக்கியத்தில் தன்னைப்போன்ற சக மனிதர்களுக்கு உணவிடும் நேய உணர்வானது 'விருந்தோம்பல' என்னும் நிகழ்வால் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது.*

*தொல்காப்பியர் மனையறம் போற்றும் தலைவியின் மாண்புகளை "விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்" (தொல்.கற்பு.11) என்று விருந்தோம்பலுக்கு முன்னுரிமை தந்து கூறியுள்ளார். திருவள்ளுவர், விருந்தோம்பலுடன் சுற்றம் ஓம்பலையும் அதிகாரமாக வைத்துப் போற்றியுள்ளார். இத்தகைய பெருஞ்சிறப்புற்ற விருந்தோம்பலை பெண்கள் தம் வாழ்வியல் நெறியாகக் கடைப்பிடிக்கப்பட்டமை குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*திருக்குறள்*

*"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி*

*வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள்.81)*

*விருந்தினரை வரவேற்று உணவிடுதலே இல்லறத்தான் கடமை என்று தெளிவுறுத்துகின்றார். நீதி மற்றும் காப்பியம் புகழ்ந்துரைக்கும் உணவிட்டு உயிர் ஓம்பும் பழக்கத்தின் மூலஊற்றாக அகத்திணையிலக்கியம் விளங்கினமை தெள்ளிதின் புலனாகும். அகத்திணையிலக்கியத்தில் தன்னைப்போன்ற சக மனிதர்களுக்கு உணவிடும் நேய உணர்வானது 'விருந்தோம்பல்' என்னும் நிகழ்வால் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது. விருந்தோம்பல் என்னும் இனிய பண்பாட்டு அறத்தை ஆணும் பெண்ணுமாக இணைந்தே செயல்படுத்தியுள்ளனர். வளம் மேம்பட்டால் தான் விருந்தினருக்கு உணவிட முடியும் என்பதும் அவர்களால் உணரப்பட்டுள்ளது. அதனால் தான் இயற்கை செழிக்கவும் வேண்டியுள்ளனர். இதனை,*

*"பசி இல் ஆகுக! பிணிசேண் நீங்குக!"* *(ஐங்குறுநூறு.பா.5)*

இரவலர் வர வேண்டும், பசி இல்லாமல் போக வேண்டும் என்பது முன்னோர்களின் விருப்பமாக இருந்துள்ளது.

விருந்தோம்பல்

பண்டைய தமிழரின் பண்பாட்டில் தலையானது விருந்தோம்பல் ஆகும். "பண்டமாற்று முறை வழக்கிருந்த அக்காலத்தில் போக்குவரத்து வசதிகளும் இல்லாத சூழ்நிலை நிலவியது. எனவே, இரவலர்கள் மட்டுமின்றி ஏனையோரும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கால்நடையாகவே நடந்து செல்ல வேண்டியிருந்தது. உணவு விடுதிகள் இல்லாத காரணத்தினால் உண்டிக்கும் உறையுளுக்கும் அனைவரும் செல்லும் ஊர்களையே நம்ப வேண்டியிருந்தது. ஆகவே, புதிதாக வருவோர்க்குப் பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையால் விருந்தோம்பல் பண்பாடு தமிழகத்து இல்லங்களில் உருவாயிற்று எனலாம். விருந்தோம்பல் என்பது இல்லம் தேடி வரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழி கூறி உபசரித்து உணவளிக்கும் உயரிய பண்பாகும். இதனை,

"விருந்தே தானும்

புதுவது புனைந்த யாப்பின் மேற்றே" (தொல்காப்பியம்.செய்யுள்.231)

உறவினரும் நண்பரும் அல்லாதவராகப் புதியவராக நம்மிடம் வரும் அனைவரையும் 'விருந்தினர்' என்கிறோம். அகநானூற்றில் மாற்றூர்கிழார் மகனார் கொற்றங்கொற்றனார் 'விருந்து' என்ற சொல்லை புதியவர் என்ற பொருளில் கையாண்டுள்ளார்.

"விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப,

வேந்தனும் வெம்பகை தணிந்தனன்" (அகம்.54)

புதிய மன்னர்கள் கொடுத்த திறைப்பொருளால் மன்னன் பகை தணிந்தான் எனச் சுட்டப்பட்டுள்ளது. விருந்தோம்பல் என்பதற்கு இணையான ஆங்கிலச்சொல் Hospitality என்பதாகும். 'விருந்தோம்பல்' என்பதற்குக் கழகத் தமிழ் அகராதி "புதிதாய் வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரிக்கை நடத்துவது" எனச் சுட்டுகின்றது. இல்லறத்தின் தலையாயநெறி விருந்தோம்பல் என்பதனைச் சிலப்பதிகாரம், கம்பராமாயணம் புலப்படுத்துகின்றது. இளங்கோவடிகள் விருந்தோம்பலை இல்லற வாழ்வில் இணைத்துள்ளார். சிலப்பதிகாரம் இதனை,

"மறப்பருங் கேண்மையோடயப்பரி சாரமும்

விருந்துபுறந் தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்"

(சிலம்பு,மனை.காதை: 85-86)

என, கோவலன் பிரிவால் கண்ணகி விருந்து செய்ய முடியாத நிலை பெற்றதற்கு வருந்துவதாகக் குறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரம் இதனை,

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்

துறவோர்க் கெகிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" (சிலம்பு,கொலை.காதை:71-73)

என, 'தொல்லோர் சிறப்பு' என்பது அறவோருக்கு அளித்தல், அந்தணருக்கு ஓம்பல், துறவோருக்கு உதவுதல் போன்றன. விருந்தோம்பல் 'தொல்லோர் சிறப்பு' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. இராமனைப் பிரிந்த சீதையின் நிலையானது, "விருந்து கண்ட போது என்னுறுமோவென்று விம்மும்" (கம்ப.சுந்தர காண்டம்,கா.ப,15:2) என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மனைவியைப் பிரிந்த இராமன் விருந்தோம்பும் தகுதி இழந்து துன்புறும் நிலைக்குச் சீதை வருந்துகின்றாள். மேற்கண்டவை கணவன் துணையோடுதான் விருந்தோம்பல் நிகழ்ந்ததற்கான சான்றாதாரங்கள். அகநானூற்றில் பெருந்தேவனார் பாடிய பாலைத்திணைப் பாடல் விருந்தோம்பலை 'இல்வாழ்க்கைத் தொழில்' என்றே சுட்டுகின்றது. இதனை,

"..................................நாளும்

*மனைமுதல் வினையொடும் உவப்ப,*

*நினை - மாண்நெஞ்சம் நீங்குதல் மறந்தே"* *(அகம்.51)*

*என, பொருள்வயிற் பிரிவு கடைகூட்டிய நெஞ்சிற்குத் தலைவன் கூறும் கூற்றில் இடம்பெறும் 'மனைமுதல் வினை' என்ற சொல்லாடல் விருந்தோம்பல் என்னும் குறியீட்டு நிகழ்வாகும். மேலும், கணவன் - மனைவி இணைந்து நிகழ்த்தும் தொழிலாக விருந்தோம்பல் கூறப்பட்டுள்ளது.*

*விருந்தோம்பும் முறை*

*விருந்தோம்பலில் உபசரிக்கும் பாங்கே முதன்மையானது. முகம் மலர்ந்து உபசரிக்கும் போது, விருந்துப்பொருள் உப்பில்லாத கூழாக இருந்தாலும் சிறப்பாக இருக்கும் என்பதை,*

*"ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மை பேசி*

*உப்பில்லாத கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்*

*முப்பழமொடு பாலன்னம் முகம் கருத்து ஈவாராயின், கப்பிய*

*பசியினோடு கடும்பசி ஆகுமன்றோ"* *(விவேக சிந்தாமணி)*

*என, விவேகசிந்தாமணி முகமலர்ச்சியுடன் தரும் பொருளின் தன்மை, முகம் கருத்து தரும் பொருளின் தன்மை என்று வேறுபடுத்திப் புலப்படுத்துகின்றது. திருவள்ளுவரும் விருந்தோம்பும் பான்மையை,*

*"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*

*நோக்கக் குழையும் விருந்து"* *(குறள். 90)*

*என, அனிச்ச மலரினும் மெல்லியர் விருந்தினர். அவர்களை நோக்கும் தன்மையில் மென்மை வேண்டும். இன்முக வரவேற்பே விருந்தோம்பலில் முதன்மையானது என்கிறார். அகஇலக்கியத்தில் எக்காலமும் விருந்திற்கு உகந்த காலமாக: குறிப்பிடப்பட்டுள்ளது. விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்ற மகளிரை முல்லை சான்ற கற்பினள்' என்று குறிப்பிடுகின்றது. என்பதை,*

*"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்*

*முல்லை சான்ற கற்பின்*

*மெல்லியல் குறுமகள்"* *(நற்றிணை 142:9-11)*

*என, சங்ககால மகளிர் நள்ளிரவில் விருந்தினர் வந்தாலும் முகம் திரிந்து நோக்காது அவர்களை எதிர் கொண்டு வரவேற்று உணவளித்தமையைக் கற்புடைமைக்குப் பொருத்திக் காட்டியுள்ளனர்.*

*சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல் பண்பு*

*உயர்ந்தோர் கூறும் வழக்கால் மரபு தோன்றுகிறது. வழக்கை உருவாக்குவதும் செயல்படுத்துவதும் உயர்ந்தோரே. இதனை,*

*"வழக்கு எனப்படுவது உயற்ர்தோர் மேற்றே*

*நிகழ்ச்சி அவர்கட்டு ஆகலான்"* *(தொல்.பொருள். 93)*

*என்று தொல்காப்பியர் கூறுவர்.*

*செல்வமுடையராய் இருக்கும்போது உணவு கொடுத்தும், இல்லாதபோது இருப்பதைப் பகிர்ந்து உடன் உண்ணும் வறியோர் சுற்றத்திற்குத் தலைவனும், தலைமை சான்றவனுமாகிய வேந்தன், அவனுடைய கூரிய துனியையுடைய வேல் முதலான அவைதாம் பகைவரைக் குத்துதலால் பிடியும் நுனியும் சிதைந்து குறுகிய பணிக் களரியில் கிடப்பனவாயின.இதனை,*

*"..................................................................*

*உண்டாயின் பதம் கொடுத்து*

*இல்லாயின் உடன் உண்ணும்*

*இல்லோர் ஒக்கல் தலைவன்*

*அண்ணல் எம்கோமான், வைந் நுதி வேலே"* *(புறம் -95)*

*என்று குறிப்பிடுகின்றது.*

*தோள் அமையினது ஒரு புறத்தே பதலை என்னும் கருவி தொங்குகின்றது. மற்றொரு புறத்தே துளையுடைய சிறிய முழா தொங்குகின்றது. இவற்றைச் சுமந்தவாறே எமக்கு உணவு இடுவார் யாருமிலராயினர். எமக்கு உணவு இட்டு கவிழ்ந்து கிடைக்கும் உண்கலத்தை மலர்த்த வல்லார் யாரெனச் சொல்லிச் சுரத்திடையே வந்திருந்து வருந்தும் விறலியே... நீ அவனிடத்துச் செல்வையாயின், பல வேற்படையையுடைய அதியாமான் ஒருபொழுதும் ஓயாமல் உண்ணவும் தின்னவும் படுதலால் ஈரம் காயாத உண்கலத்தில் மெழுகான் இயன்ற மெல்லிய அடைபோலக் கொழுத்த நிணம் மிக அளித்தலில் வல்லவன். என்பதை,*

*"ஒரு தலைப் பதலை தூங்க ஒரு தலைத்*

*நூம்புஅகச் சிறுமுழாத் தூங்கத் தாங்கித்*

*கவிழ்ந்த மண்டை மலர்க்கு நர்பார் எனச்*

*சரன் முதல் இருநத சில்வளை விறலி"* *(புறம் -103)*

*என்னும் பாடல் குறிப்பிடுகின்றது.*

*தேவர்க்குரிய அமிழ்தம் தெய்வத்தாலோ தவத்தாலோ தமக்க வந்து கூடுவதாயினும் அதனை இனிதென்று கொண்டு தனித்து உண்டலும் இலர். யாரோடும் வெறுப்பிலர் பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி, அது தீர்த்தற் பொருட்டுச் சோம்பியிருத்தலும் இலர். புகழ் கிடைக்குமாயின் தம் உயிரையும் கொடுப்பர், பழியெனின் அதனால் உலகம் முழுதும் பெறினும் கொள்ளார்; மனக்கவலை இல்லார். அத்தகைய மாட்சிமைப்பட்ட தன்மையராய், தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் சான்றோரால் இவ்வுலகம் இருக்கின்றது. இதனை,*

*"............................................................*

*பிறர் அஞ்சுவது அஞ்சி*

*புகழ் எனின், உயிரும் கொடுக்குவர் புழிஎனின்*

*உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்*

*அன்ன மாடசி அனையர் ஆகி"* *(புறம் - 162)*

*என, தனித்துத் தாம் மட்டும் உண்ணுவதை விரும்பார்; இதனை இனிது எனத் தமியர் உண்டலும் இலர் என்றார். யாவரிடத்தும் அன்புடையர் என்பதை உணர்த்த முனிவிலர் என்றும் அஞ்சத்தகும் துன்பத்திற்கு அஞ்சி, அதனால் செயல்படாது சோம்பியிரார் என்பதை துஞ்சலும் இலர்: என்று குறித்தார். மேலும்,*

*"உண்க என உணரா உயவிற்று ஆயினும்*

*..................................................................*

*வரகும் தினையும் உற்றவை எல்லாம்*

*இரவல் மாக்கள் உணச்கொளச் தீர்ந்தென*

*...................................................... கூட்டு"* *(புறம். 333)*

என, தம்மிடம் உள்ள வரகும் தினையும் இரவலர்க்கு வழங்கப்பட்டுவிட்டன. குறி எதிர்ப்பாகத் தந்த பொருள்களும் கிடைக்கப் பெறவில்லை. வீரனின் மனைவி, விதைப்பதற்காக வைத்திருந்த தினையைக் குத்தி உணவு சமைத்து வழங்கினாள். அவ்வுணவே போர் மேற்செல்லும் வீரனின் உணவுமாயின. ஒரு வீரனின் மனைவியின் விருந்தோம்பும் இயல்பு இப்பாடலால் விளக்கப்பட்டுள்ளது. பகைவரொடு போர் செய்வதற்கு அரசர்கள் வழங்கும் பொருளை அவன் பாணர் முதலியோர்க்கும் பரிசாக வழங்குவான். என்பதை,

“எழுதி யன்ன தின்நிலைக் கதவம்

கழுதுவழங்கு அரைநாள் காவல மடிர்தென

இம்மை உலகத்து இல் எனப பலநாள்

பொம்பல் ஓதி நீவிய காதலொடு“ (அகம் - 311)

என்று அகப்பாடல் குறிப்பிடுகின்றது

மழை பெய்யாது பொய்த்தமையால் திசையெல்லாம் வெப்பம் மிகுந்தது. பாலைவழி வருவோரைப் பேணிக் காக்கும் பண்பினைப் பெற்ற வெற்றி ஆயர்கள் இளைய எருதுகளின் எழுத்தில் கட்டிய மூங்கில்குழாயுள் அடைத்து வைத்த சுவைமிக்க புளிச் சோற்றினை தேக்கின் இலையில் இட்டு அப்புதியோரின் பசி நீங்கக் கொடுத்தார்.

அத்தகைய புல்லி என்பானது நல்ல நாட்டின் அப்பாலுள்ள கடத்தற்கரிய பாலை வழியைக் கடந்து நம் தலைவர் சென்றிருந்தாலும் காலந் தாழ்த்தாது நின்னை நினைந்து விரைந்து வருவார். என்பதை,

“அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கு.ம் முல்லை சான்ற கற்பின்

மெல்இயற் குறுமகள் உறைவிள் ஊரே“ (நற்? - 42)

என்னும் பாடல் குறிப்பிடுகின்றது

இரவு நேரத்தே விருந்து வரினும் உவப்பவள் என் தலைவி. அவள் என்சொற் கேட்டு இல்லிருந்து நல்லறம் செய்யும் கற்பினையும், மென்மையான இயல்பையும் இளமையையும் உடையவள் ஆவாள். அத்தகைய காதலி தங்கியிருப்பதும் பொய்யாத வருவாயுடையதுமான ஊர் காட்டகத்தே அமைந்தது.

'மனையற மகளிரின் முதன்மையான கடமை விருந்தோம்பல், விருந்து என்பது இல்லம் தேடிப் புதிதாக வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பது ஆகும். வீரமகளிர் சமுதாயத்தோடு இரண்டறக் கலந்து ஊரோடு பசித்திருந்தும் கிடைத்ததை ஊரோடு பகிர்ந்துண்டும் தம்குடியை நாடி வருவோரைப் பசித்துயர் நீக்க விருந்தோம்பி வாழ்ந்த நிலையைப் புறநானூறு கூறுகின்றது. இதனை,

“ஒலிமென் கூந்தல் உண்ணுதல் அரிவை

நடுகல் கைதொழுது பரவும் ஓடியாது

விருந்தெதிர் பெறுகதில் யானே“ (புறம்.306; 3-5)

என்ற பாடல் நாள்தோறும் விருந்து வருதல் வேண்டுமென நடுகல் வழிபாடு நிகழ்த்துவதை எடுத்துக்காட்டுகிறது.

'சங்ககாலத்தில் விருந்தோம்புதல் ஒரு சிறந்த கலையாகப் போற்றப்பட்டது. கணவனுடன் கூடி வாழும் மங்கல மகளிர்க்குரிய தனி உரிமையாக இது கருதப்பட்டது. கணவனை இழந்தவர்களும் பிரிந்து வாழ்பவர்களும் விருந்தை எதிர்கொண்டு வரவேற்கும் உரிமை பெறவில்லை. கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகி தனக்கு நேர்ந்த இழப்புக்களை நிரல்படுத்தும்போது,

“விருர்தெகிர் கோடலும் இந்த என்னை“ (சிலப்.16; 73)

என விதந்து கூறுவதைக் காணலாம்.

*சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும், காப்பிய காலத்திலும் மரபுவழிப்பட்ட பண்பாகப் போற்றப்பட்ட விருந்தோம்பல் பக்திகாலத்திலும் தொடர்ந்து போற்றப்பட்டு வந்ததைச் சேக்கிழார் நயம்பட எடுத்துரைப்பார்.* இதனை,

*“காலெல்லாம் தகடடுவரால் கரும்பெல்லாம் கண்பொழிதேன்*

*பாலெல்லாம் கதிர்காலி பரப்பெல்லாங குலைக்க முரு*

*சாலெல்லாம் தரளநிரை தட மெல்லாஞ் செங்கழுநீர்*

*மேலெல்லாம் அகிற்றாபம் விருந்தெல்லாம் திருந்துமனை“*

*(பெரியபுராணம். 15)*

*என, அங்குள்ள வீடுகளில் விருந்தினர்களை உபசரிக்கும் வழக்கம் உள்ளமை காட்டப்படுகிறது. வாழையடி வாழையாக வந்துகொண்டிருக்கும் இந்தப் பண்பையும், மரபையும் நமக்கு நினைவூட்டவே பாரதிதாசனார் தாம் படைத்த 'குடும்ப விளக்கு' எனும் காவியத்திலும் சிறப்பாக விளக்கிப் பாடியுள்ளதையும் காணலாம்.*

தொகுப்புரை

*நன்னன் நாட்டைச் சூழ்ந்த எல்லா நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் பயமின்றி, மகிழ்ச்சியாக வாழ்ந்து தம்மை நாடி வருவோரையும் வழிப்போக்கர்களையும் விருந்தினராகக் கருதி வரவேற்று உபசரித்து விருந்துண்டு மகிழுமாறு செய்ததை விரிவாகக் காண முடிகிறது. அவர்களுக்கு விருந்தோம்பும் பண்பு இயல்பாகவே அப்பகுதியில் வாழும் எல்லா மக்களுக்கும் இருந்ததென்பதைக் காண முடிகிறது. தம் மன்னன் நன்னனைக் காண வருவார் தத்தம் உறவினரே எனக் கருதி மகிழ்ந்து விருந்து வைத்து உபசரிக்கும் பண்பை நன்னனின் நாட்டு மக்கள் பெரிதும் போற்றி வாழ்ந்தனர் எனத் தெரிய வருகிறது.*

*துணைநின்ற நூல்கள்*


*1. அடியார்க்க நல்லார். (உரை.), :* சிலப்பதிகாரம்
கழக வெளியீடு
சென்னை
முதற்பதிப்பு-1950

*2. இராமசுப்பிரமணியம். வ.த.* : பெரியபுராணம்
திருமகள் நிலையம்
வெங்கட் நாராயணா ரோடு
தி.நகர், சென்னை-600 017
முதற்பதிப்பு-2002

*3. இளம்பூரணர். (உ.ஆ.),* : தொல்காப்பியம் பொருளதிகாரம்
கழக வெளியீடு
சென்னை
பதிப்பு-1955

*4. சாமிநாதையர். உ.வே.,* : புறநானூறு
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சை
ஆறாம் பதிப்பு-1963

*5. பரிமேலழகர்.* : திருக்குறள்
கழக வெளியீடு
சென்னை
முதற்பதிப்பு-1961

*6. பாலசுப்பிரமணியன். கு.வெ.,* : புறநானூறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
அத்பத்தூர்
சென்னை-98
முதற்பதிப்பு-2002

*7. பாலசுப்பிரமணியன். கு.வெ.,* : நற்றிணை (மூலமும் உரையும்)
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
அத்பத்தூர்
சென்னை-98
முதற்பதிப்பு-2004


********* ********* ********** ********* ********* ********** ********** **********